சென்றார். காரை, மகன் பிரதீப் போலீசார் விசாரிக்கின்றனர்.

## 'காலைக்கதிர்' செய்தி எதிரொலி

# காவிரி கரையோர பருத்தி வயல்களில் உதவி பேராசிரியர் ஆய்வு

மேட்டூர், ஜூன் 25–

பூச்சி தாக்குதலால் பாதித்த பருத்தி வயல்களை, சந்தியூர் வேளாண் ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர் ஆய்வு செய்தார்.

கொளத்தூர் ஒன்றியம், கோல்நாயக்கன்பட்டி, நவப்பட்டி பஞ்சாயத்துகளில், நடப்பாண்டு காவிரி கரையோரம், 400 ஏக்கரில் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்தனர். செடிகள் பிஞ்சு வைக்கும் சமயத்தில், பூச்சி தாக்குதலால் பாதித்து, படிப்படியாக கருக தொடங்கின. இது குறித்து, 21ல், 'காலைக்கதிர்' நாளிதழில் செய்தி வெளியானது.

இதையடுத்து, சந்தியூர் வேளாண் ஆராய்ச்சி மைய பூச்சியியல் இணை பேராசிரியர், திட்ட ஒருங்கிணைப்பாளர் கீதா ஆலோசனைப்படி, விதை அறிவியல், தொழில்நுட்ப உதவி பேராசிரியர் விஜயன், இரு பஞ்சாயத்துகளிலும், பாதிக்கப்பட்ட பருத்தி வயல்களை, நேற்று ஆய்வு செய்தார்.

பின், அவர் கூறியதாவது:

கோல்நாயக்கன்பட்டியில், வெயில் தாக்கம் அதிகமாக இருந்ததால் வெள்ளை ஈ அதிக அளவில் பரவி, பருத்தி செடிகள் பாதித்துள்ளன. விவசாயிகள், வெள்ளை ஈயை கட்டுப்படுத்தும் மருந்தை தெளித்திருந்தால் தவிர்த்திருக்கலாம். பாதிப்பை தடுக்க,



கோல்நாயக்கன்பட்டி பஞ்சாயத்து, சாணாவூரில், பாதிக்கப்பட்ட பருத்தி செடிகளை, சந்தியூர் வேளாண் ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர் விஜயன் ஆய்வு செய்தார்.

நிலத்தில் ஈரப்பதம் இருக்க வேண்டும். அப்போது, அசிடாமிபிரிட் மருந்து, ஒரு லிட்டர் நீரில் ஒரு மில்லி கிராம், இமிடாபிளோவிட் மருந்து, 10 லிட்டர் நீரில், எட்டு மில்லி கிராம், டிரியோபாஸ் மருந்து, ஒரு லிட்டர் நீரில், மூன்று மில்லி கிராம் கலந்து தெளித்து, பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

பூச்சிக் கொல்லி மருந்து தெளித்த, 15 நாட்களில், ஒரு லிட்டர் நீரில், இரண்டு மில்லி வேப்ப எண்ணெய் கலந்து தெளிக்க வேண்டும். விவசாயிகளுக்கு சந்தேகம் இருந்தால், அருகிலுள்ள வேளாண் அதிகாரிகளையோ, வேளாண் ஆராய்ச்சி மையத்தையோ அணுகினால், விளக்கம் அளிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.